**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**நாள்** 05.08.2025

**அசல் வழக்கு எண்.276/2020**

**பி.சா.1 – அருள்மொழி, க/பெ.சுப்பிரமணியன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

இந்த பாகப்பிரிவினை வழக்கு எதற்காக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் என்னுடைய மாமனார் சொத்தில் எனக்கு பாகம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். உங்கள் மாமனார் உயில் எழுதி வைத்ததாக சொல்கிறீர்கள் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த உயிலின் அடிப்படையில் தான் அசல் வழக்கு எண் **3/2005** தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் கணவர் உயிருடன் இருந்த காலத்தில் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் மருந்து கடை வைத்திருந்தார். மருந்து கடை இருந்ததால் அவருக்கு நிறைய கடன் இருந்தது என்றால் கடன் கிடையாது. பைசல் செய்ததாக சொல்கிறீர்கள் என்ன கடன் பைசல் செய்தீர்கள் என்றால் என் கணவர் திடீரென்று இறந்து விட்டதால் அவர் வாங்கி இருந்த கடன்களை எல்லாம் நான் பைசல் செய்தேன். அந்த கடையை மூடி விட்டேன். பாகப்பிரிவினை வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மீது சின்ன காஞ்சிபுரம் ஊரக வங்கியில் கடன் இருந்தது என்றால் கடன் இருந்தது. அது என்னுடைய கணவர் தம்பி செல்வக்குமாருக்காக வாங்கி கொடுத்த கடன் ஆகும். அந்த கடன் உங்கள் கணவர் உங்கள் மைத்துனர் செல்வகுமார் நாத்தனார் கலைச்செல்வி மற்றும் உங்கள் மாமியார் சேர்ந்து வாங்கிய கடன்தான் என்றால் சரிதான். உங்கள் கணவர் இறந்த பிறகு ஊரக வங்கியில் எவ்வளவு கடன் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. அந்தக் கடனை நீங்கள் அடைத்தீர்களா என்றால் அந்த கடன் என்னுடையது இல்லை என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். எப்பொழுது அந்தக் கடன் அடைக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. ஊரக வங்கி மீது அசல் வழக்கு எண் **247/2006** என்ற வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் அந்த பத்திரம் கொடுக்கக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தோம். எந்த பத்திரம் என்றால் வீட்டு பத்திரம் ஆகும். அந்த வழக்கு என்ன ஆனது என்று ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண் **3/2005** வழக்கில் முதல் நிலை தீர்ப்பானை பாகம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பாகியுள்ளது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் தீர்ப்பாகியுள்ளது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு **11/2018** நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் அதனை பற்றி நீங்கள் சொல்லவில்லை என்றால் சரியில்லை. அந்த மேல்முறையீட்டில் தீர்ப்பு வந்த பிறகு தான் உங்களுக்கு பாகம் இருக்கிறதா இல்லையா

என்பது தீர்மானிக்கப்படும் என்றால் சரியில்லை. அசல் வழக்கு எண் **3/2005** பற்றி இந்த வழக்கில் சொல்லி உள்ளீர்கள் ஆனால் மேல்முறையீட்டு வழக்கு எண் **11/2018** பற்றி வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்றால் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. ஊரக வங்கியில் வைத்த கடன் பைசல் செய்யவில்லை என்று நீங்கள் சொல்லி விட்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் கணவர் இறந்தபோது எவ்வளவு கடன் இருந்தது நீங்கள் எவ்வளவு பைசல் செய்தீர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மாமனார் சொத்தில் பாகம் கேட்க தெரிகிறது ஆனால் அவர் பட்ட கடன் உங்களுக்கு தெரியவில்லை என்றால் அவருக்கு எந்த கடனும் இல்லை. உயில் படித்துப் பார்த்தீர்களா அதில் கடன் அடைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியில்லை. உயிலில் கடன் பற்றி சொல்லப்பட்டுள்ளது தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மாமனார் கடன் இருப்பது பற்றி சொல்லி இருந்து உங்கள் மாமியார் மற்றும் மைத்துனர் பிரதிவாதி கடனை ஏதாவது அடைத்தார்களா தெரியுமா என்றால் தெரியாது. செல்வகுமார் கடன் வாங்கியதாகவும் அதனை அவர் அடைக்கவில்லை என்றும் எவ்வளவு கடன் தொகை இருப்பது என்றும் ஆவணங்கள் ஏதேனும் **3/2005** வழக்கில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உங்கள் கணவர் பட்ட கடனை பிரதிவாதி செல்வகுமார் தான் அடைத்தார் என்பதற்கு சாட்சியாக **16** ஆவணங்களை அசல் வழக்கு எண் **3/2005-**ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியில்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் என் மாமனார் சொத்துக்களை அடமானம் வைத்துள்ளார்கள் எனக்கு தெரியாமல் அடமானம் வைத்துள்ளார்கள் ஆகவே அந்த ஆவணங்கள் அனைத்தும் செல்லாது என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உங்கள் மாமனார் சொத்துக்களை அடமானம் வைத்தது பற்றி உங்களுக்கு எப்படி தெரியவந்தது என்றால் என்னுடைய மகள் ஆன்லைனில் வில்லங்கம் போட்டு பார்த்தார் அவர் போட்டுப் பார்த்தபோது வில்லங்கங்கள் உள்ளது தெரியவந்தது. அவர் என்னிடம் சொன்னார். உங்கள் மாமியார் செல்வக்குமார் மீது எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.**4.** உங்கள் மாமியார் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் கடந்த **25** ஆண்டுகளாக முதல் பிரதிவாதி செல்வகுமார் அவர்களின் பராமரிப்பில் இருந்து வருவதாகவும் மூத்த மகன் சுப்ரமணியன் நடத்திய மருந்து கடையில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது அந்த கடனையும் செல்வக்குமார் தான் அடைத்தார் என்று ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்பட்டுள்ளது தான் அது தவறாகும்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.